# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

*************

**முறையீட்டு மனு எண் 399/2016/பே.2**

**ஆணை எண்.263/2017/ நாள்–27–11–2017**

**திரு. சி. பன்னீர்செல்வம்,**
**த/பெ திரு. சின்னப்பன்,**
**41, வடக்குத் தெரு,**
**ஆதிவராகநத்தம்,**
**புவனகிரி – 608601,**
**கடலூர் மாவட்டம்.** ---- முறையீட்டு மனுதாரர்.

**செயல் அலுவலர்,**
**புவனகிரி பேரூராட்சி,**
**கடலூர் மாவட்டம்.** ---- எதிர் மனுதாரர்.

## ஆணை

கடலூர் மாவட்டம், புவனகிரி ஆதிவராகநத்தம், 41, வடக்குத் தெருவைச் சேர்ந்த திரு சி, பன்னீர்செல்வம், த/பெ திரு சின்னப்பன் என்பவரின் 06.05.2016ம் தேதியிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 10.05.2016ல் பெறப்பட்டு முறையீட்டு, மனு எண். 399/2016 ஆக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சியில் 2014–2015ம் ஆண்டு நபார்டு திட்டத்தின் கீழ் ஆதிவராகநத்தம் வடக்குத் தெரு முதல் விருத்தாச்சலம் ரோடு வரை தார்ச்சாலை அமைக்கும் பணி மதிப்பீட்டில் உள்ளவாறு பணியினை மேற்கொள்ளாமல் ஒப்பந்தக்காரர் தனது விருப்பப்படி செய்துள்ளதாக தனது மனுவில் தெரிவித்துள்ளார். மேலும் 2012ம் ஆண்டு பேரூராட்சி பொது நிதியில்

ஆதிவராகநாத்தம் இலுப்பை குளத்தின் மேற்கு கரையில் WBM II & III Layer மற்றும் தார்ச்சாலை போடப்பட்டு நல்ல நிலையில் இருந்த சாலையினை தற்போது மீண்டும் நபார்டு திட்டத்தின்படி 200 மீட்டருக்கு தரமற்ற சாலை போடப்பட்டுள்ளதாகவும், இச்சாலையினை தரக்கட்டுப்பாட்டு குழுவினர் மூலம் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கவும் கோரி தனது முறையீட்டு மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

இம்முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்க இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 399/2016/பே.2/ நாள் 12.05.2016ல் புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித எண் 267/2016/ அ.1/நாள் 03.06.2016ன்படி மேற்படி பணிக்கான தொடர்புடைய கோப்புகள், மதிப்பீட்டு நகல், தொழில் நுட்ப அனுமதி, தரக்கட்டுப்பாட்டு அறிக்கை நகல், ஆகியவற்றினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து பேரூராட்சி செயல் அலுவலர், புவனகிரி அவர்களின் விளக்கம் /வாக்குமூலம் பெறவேண்டி இம்முறைமன்ற நடுவத்தில் 14.11.2016 அன்று ஆஜராக இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை எண் 399/2016/பே.2/ நாள்18.10.2016ன் மூலம் ஆணையிடப்பட்டது.

புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தில் 14.11.2016ல் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார்.

".......06.05.2016ம் நாளிட்ட முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள குற்றச்சாட்டு எண் 1 சம்பந்தமாக நபார்டு திட்டம் சாலை அமைக்கும் பணி சைடு பிளானில் உள்ளபடி போடப்பட்டுள்ளதாகவும் தரமாக விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

குற்றச்சாட்டு 2 சம்பந்தப்பட்ட ஒப்பந்த புள்ளியில் குறிப்பிட்டள்ளவாறு மெட்டல் சேதாரம் செய்யப்பட்டு உரிய அளவில் WBM செய்யப்பட்டுள்ளதாகவும், திரு பூமிநாதன் பேரூராட்சி உதவி பொறியாளர் அளவுகளை மேற்கொண்டு அளவு புத்தகத்தில் பதிவு செய்துள்ளதாகவும் அதனை உதவி செயற்பொறியாளரால் மேல் அளவுகள் செய்யப்பட்டுள்ளது.

குற்றச்சாட்டு எண் 3 சம்பந்தமாக மொத்தம் 1 கிமீ 190 மீட்டர் சாலையில் அகலம் 4.50க்கு பதிலாக 3.75 மீட்டருக்கு சாலைபபணி செய்யப்பட்டது, காரணம் நபார்டு சாலை மதிப்பீடு தயார் செய்யும்போது 3.75 மீட்டருக்கான அகலத்திற்கு மட்டுமே மதிப்பீடும் செய்யப்பட்டது.

220 மீட்டர் நீளத்திற்கு அப்போது இருந்த உதவிப் பொறியாளர் திரு பூமிநாதன் மதிப்பீடு செய்தார் எனவும் 220 மீட்டர் நீளத்திற்கு வடிகால் கட்டக்கூடிய பகுதியில் ஆக்கிரமிப்பு உள்ளதால் வடிகால் கட்ட முடியவில்லை எனவும் அதற்கான மதிப்பீடு ரூ 6.00 லட்சம் பட்டுவாடா செய்யப்படவில்லை.

இலுப்பைக் குளத்தின் மேற்கு கரையில் குறிப்பிடப்பட்டுள்ள தார்ச்சாலை இருந்த இடம், பேஸ்ட் கேரட் மற்றும் மெட்டலாக 1 1/2 இன்ச் ஜல்லி போட்டே அமைக்கப்பட்டது.

குற்றச்சாட்டு 6 சம்பந்தமாக இந்த பணி நடக்கும்போது தான் பேரூராட்சி செயல் அலுவலராக இருந்ததாகவும் ஒப்பந்த புள்ளியில் குறிப்பிட்டுள்ளவாறு உரிய பரிமாணத்தின்படி உரிய முறையில் தார்வேலை செய்யப்பட்டது.

சைடு கிராவல் குறித்தும் இந்த தார்ச்சாலை அமைக்கும் பணியில் உள்ள பிற விவரங்கள் குறித்தும் ஒரு வாரத்தில் அறிக்கை சமர்ப்பிப்பதாகவும், முறையீட்டு மனுதாரர் ஒரு ஒப்பந்தக்காரர் எனவும் தனது வாக்குமூலத்தில் செயல் அலுவலர், தெரிவித்துள்ளார்.

2012ம் ஆண்டு இந்த சாலை பொது நிதியில் போடப்பட்டது உண்மை எனவும் , மழையால் சேதமடைந்துவிட்டதால் நபார்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மேலும் இச்சாலைக்கு மதிப்பீட்டில் ஒரு லேயர் மட்டுமே அனுமதிக்கப்பட்டதாகவும் இந்தச்சாலை தரக்கப்பட்டுப்பாடு குறித்து பாண்டிச்சேரி பொறியியல் கல்லூரி சான்று பெறப்பட்டுள்ளதெனவும் தனது வாக்குமூலத்தில் புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

மேற்படி வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித எண் 267/2016/அ.1/ நாள் 19.11.2016 ல் தனது கூடுதல் விளக்கத்தினையும் சமர்ப்பித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து முறையீட்டு மனுதாரின் நேரடி விளக்கம் பெற இம்முறைமன்ற நடுவத்தில் 25.05.2017 ஆஜராக இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை எண் 399/2016/பே.2 நாள் 18.04.2017ல் ஆணையிடப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுதாரர் மேற்படி விசாரணைக்கு ஆஜராகாதோடல்லாமல் அதற்கான எந்த விளக்கத்தினையும் சமர்ப்பிக்கவில்லை.

மேலும் பேரூராட்சி செயல் அலுவலர், புவனகிரி அவர்களின் விளக்க கடிதம், மற்றும் செயல் அலுவலரின் நேரடி வாக்குமூல நகல்கள் ஆகியன பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் கடலூர் மண்டலம் அவர்களுக்கு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 399/2016/பே.2/நாள் 28.08.2017 மற்றும் 26.09.2017 ஆகிய தேதிகளில் அனுப்பிவைக்கப்பட்டு இச்சாலையினை தல ஆய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர் சட்டம் 2014 விதி 6 (4) (a) ன் கீழ் ஆணையிடப்பட்டது.

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், கடலூர் தனது ந.க.எண். 880/2016/பே.1/ நாள் 06.10.2017 ன் மூலம் தனது விரிவான ஆய்வு அறிக்கையில் உரிய ஆவணங்கள் மற்றும் சாலைப்பணி ஆய்வு செய்யப்பட்டதற்கான புகைப்பட நகல்களுடன் இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனு தரப்பிலான விளக்கத்தினை சமர்ப்பிக்க இம்முறைமன்ற நடுவத்திற்கு ஆஜராக அழைப்பாணை அனுப்பியும் ஆஜராகாதோடல்லாமல் அதற்கான எந்த விளக்கத்தினையும் சமர்ப்பிக்கவில்லை. இந்நிலையில் மேற்படி பணிகள் முறையாக நடைபெற்றுள்ளதாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், கடலூர் மண்டலம் அவர்களின் ஆய்வு அறிக்கை மற்றும் பணிக்கான புகைப்பட நகல்களும் சமர்ப்பித்துள்ளார்.

எனவே முறையீட்டு மனுவினை முகாந்திரமற்றதாக கருதி தள்ளுபடி செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள்27-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர்.**

-//உத்திரவின்படி-அனுப்பப்படுகிறது//-

செயலாளர்.

பெறுநர்

1.திரு. சி. பன்னீர்செல்வம்,
த/பெ திரு. சின்னப்பன்,
41, வடக்குத் தெரு,
ஆதிவராகநத்தம்,
புவனகிரி - 608601,
கடலூர் மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
புவனகிரி பேரூராட்சி,
கடலூர் மாவட்டம்.